**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.67/2017**

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி D. ஞானசௌந்தரி அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு அக்டோபர் மாதம் 31 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அலெக்சாண்டர் | மதம் | : இந்து |
| த/பெ | : மூர்த்தி | ஜாதி | : -- |
| வயது | : 35 | கிராமம் | : பொன்பாடி |
| தொழில் | : தையல் தொழில் | வட்டம் | : திருத்தணி |

**31.10.2025**
**வா.சா. 2 ன் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கில் 2ம் வாதி ஆவேன். வாதி தரப்பு 2ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 1 உயிலை என் பாட்டி எனக்கும் என் சுரேஷ்குமாருக்கும் எழுதி வைத்தார். உயில்படி நாங்கள் சொத்தை அனுபவித்து வருகிறேன். பிராதுப்படி தீர்ப்பு செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

(குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)